Regd. No M 873.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மக்ஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

5 - MAR 1924

தொகுதி 9 | காளயுக்தி௵ கார்த்திகை௴ 1918௵ நவம்பர்௴ | பகுதி 7

விஷயங்கள்

1. தற்காலநிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர், பி. ஏ. 185
2. தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்—ராமச்சந்திர நாயுடு. 193
3. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்கு சாமி ஐயர் ... 201
4. புத்தகவிமர்சம் 203, 208, 213
5 இந்திய சாரணர் சங்கம்—பி. ஏ. சுப்ரஹ்மண்யம் 206
6. லோக குரு கும்மி 209
7. மனித தேகமும் அதனாலடையும் பெரும் பயனும்—கே. எஸ். துரைசாமி பண்டிதர் 210
8. சமாசாரம் 216

SCANNED

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ. 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

SCANNED

அடியில்கண்ட புஸ்தகங்களை நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்.

முந்துங்கள்		விலைசோற்பம்
1	ஸாக்ரடீஸ் சரித்திரம்—புரொடஸர் ரெங்காச்சாரி	0—12—0
2	விக்கிரஹாராதனை—சம்பாஷணை—கே. எஸ். ராமச்சந்திரய்யர்	0—1—0
	மீனாக்ஷிசுந்தரம்—நாடகம்—கி. வெங்கிட்டராமய்யர்	0—6—0
4	கல்வி கற்பித்தல்—ஈஸ்வர கைங்கரியம் ...	0—8—0
5	எனது பிரதிக்ஞை	0—12—0
6	பிரஹ்மக்ஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயன் யாது	0—9—0
7	நமது பெறும் தொல்லை—இது நீங்கும்வழி	0—3—0
8	கர்மநாசம்	0—3—0
9	சின்னங்கள்...	0—3—0
10	ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள் ...	0—3—0
11	ஸன்மார்க்க முறையும் சம்சாரமும் ...	0—3—0
12	மோக்ஷம் அல்லது வீடுபெறல் ...	0—3—0
13	ஸ்தூல பிரபஞ்சதர்மங்கள்—ஆத்மதர்மங்கள்	0—3—0
14	ஏன் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது	0—3—0
15	மகாலயபக்ஷமும் நவராத்திரியும் ...	0—1—0
16	காயத்ரி ராமாயணம்	0—1—0
17	காயத்ரி	0—1—0
18	சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ...	0—2—0
19	ஹிந்து என்பவன் எவன் ...	0—1—0
20	லோககுருவின் அவதாரங்கள்... ...	0—1—0
21	புத்த சரித்திரம்	0—0—6

தபால் சார்ஜ் வேறு

பூர்ணசந்ரோதயம் ஆபீஸ்,

மதுரை

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 | காளயுக்தி௵ கார்த்திகை௴ 1918௵ நவம்பர்௴ | பகுதி 7

தற்கால நிலைமை.

நவம்பர்௴ 18உயானது பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர்க்கெல்லாம் மிகவும் புனிதமான தினம். 43 வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் பிரஹ்மக்ஞான சபையின் ஸ்தாபகர்களான மாதா ஸ்ரீ ஹெலினாம்பாள் பிளவாட்ஸ்கி அம்மாளும் ஸ்ரீமான் ஹென்றி ஸ்டீல் ஆல்காட்டும் இச்சபையை இப்பூவுலகில் ஸ்தாபித்தார்கள். துவக்கத்தில் சிற்றருவிபோலிருந்து இப்போது மகாநதிபோல் பிரவகித்து உலகமெல்லாம உய்யுமாறு ஜீவாதாரமான அமிருதத்தைப் பெருக்கிவருகிறது. ஆதியில் அறிவை மாத்திரம் புத்தக ரூபமாயும உபந்யாச ரூபமாகவும் புகட்டிவந்த இச்சபை இப்போது அவ்வறிவை நடத்தையில பிரயோகிக்கும்படி கற்பித்துவருகின்றது. மனிதனுடைய நடபடிக்கைகள் யாவற்றிலும் இப்போது பிரஹ்மக்ஞானத்தின் கற்பினையானது பாய்ந்து மாறுதலையடையாதது ஒன்றும் இல்லையெனலாம்,

ஆகையால் மதுரையில் அன்று பிரஹ்மக்ஞான மந்திரத்தில், அத்தினமானது கொண்டாடப்பெற்றது. அங்கத்தினர்களும் அபிமானிகளும் அநேகர் நிறைந்திருந்தனர். அக்கிராஸனரான ஸ்ரீ சகோ. அ. ரெங்கசாமி ஐயர் அவர்கள் இச்சபையின் சரித்திரத்தையும், அச்சபை உலகத்தில் செய்திருக்கும் உபகாரத்தையும், வெகு அழகாயும் விரிவாயும் கூறினர். பின்னர் ஸ்ரீ சகோ. வி. இராமசந்திரையர் தேவதைகள், பிதிருக்கள், மகாயோகிகள் என்றவர்கள்யார் என்றும் அவர்கள் நமக்கு செய்திருக்கும் உபகாரம் என்னவென்றும் அவர்களுக்கு நாம் எவ்விதம் பிரதியுபகாரம் செய்வது என்றும், விஸ்தாரமாயுரைத்தார். அபிமானியான ஸ்ரீமான் ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் பி. ஏ. பி. எல். "பிரஹ்மக்ஞானமும் கடமையும்" என்பதையும், ஸ்ரீமான் எம். எஸ். ராமசுவாமி ஐயர் அவர்கள் பி. ஏ. பி. எல். எல். டி., பிரஹ்மக்ஞானமும இந்திய தேசீயக்கல்வி என்பதைப்பற்றியும், ஸ்ரீமான் என். எஸ். விசுவநாதையர் அவர்கள் பி. ஏ. பி. எல்., "பிரஹ்மக்ஞானமும் ஹிந்துக்கள் பண்பும" என்ற விஷயத்தைப்பற்றியும், ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரசர்மா அவர்கள் பி. ஏ. "பிரஹ்மக்ஞானமும் சிற்பமும்" என்ற விஷயத்தைப்பற்றியும், ஸ்ரீமான் சகோ. எம். நாராயணசாமி ஐயர் அவர்கள் பி. ஏ. பி. எல்., பிரஹ்மக்ஞானத்தின் சர்வவியாபகததன்மையைப்பற்றியும் ஸ்ரீமான் சகோ. வி. விசுவநாதையர் அவர்கள் பி. ஏ. பி. எல்., ஆத்ம பரிபாகத்தைப்பற்றியும பேசினர்கள். அப்பால் இந்திய சாரணர் சங்கத்தின் தலைவரான ஸ்ரீமான் சகோ. பி. ஏ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "பிரஹ்மக்ஞானமும் சாரணர் சங்கமும்" என்கிற விஷயத்தையும், ஸ்ரீமான் சகோ. அநந்தையங்கார் "பிரஹ்மக்ஞானமும குழந்தைகளைப் பாதுகாத்தலும்" என்ற விஷயமாயும் பேசினர்கள். பிறகு அக்கிராஸனரின் முடிவுரையுடன் அக்கழகம் வெகு விமர்சையாய் முற்றுப்பெற்றது. அங்கத்தினரல்லாதவர்கள் இக்கூட்டத்தில் முக்கியமான உபந்யாசங்கள் செய்தது பாராட்டத்தக்கது.

சென்னையிலும் அன்றுதினம் பொது ஜனக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அவ்வமயம் மாதுஸ்ரீ அன்னி பெஸன்டம்மையவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள் ஸ்ரீமான் டாக்டர் சுப்பிரமணிய ஐயர் அவர்களும், ஸ்ரீமான் ஹைகோர்ட்டு ஜட்ஜ் சதாசிவையர் அவர்களும், மதனப்பள்ளி கல்லூரித்தலைவர் ஸ்ரீ கஸின்ஸும் ஸ்ரீமான் ஜார்ஜ் அருண்டேலும் சமயோசிதமான வார்த்தைகள் பேசினார்கள். ஒவ்வொரு பேச்சுக்கும் இடையே சில பாட்டுகளும், சில ரூபகங்களும் நடந்தன. கடைசியில் மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மையவர்கள் முடிவுரை கூறினார்கள். அதை கீழே கூறுவோம்.

***

பிரஹ்மக்ஞானத்தால் ஒவ்வொருவரும் தான் அடைந்த பிரயோஜனத்தை யெடுத்துக் கூறினார்கள். அவ்வுதவியானது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சமயத்தில் வெவ்வேறு விதமானதாகும். அவனவனுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டபோது அவனவனுக்கு ஏற்றவாறு உதவியானது செய்யவேண்டுமல்லவா? பிரஹ்மக்ஞானமானது ஒருவரையும் தன் மதத்தினின்று பிறமதத்திற் புகுத்த முயல்கிறதில்லை. ஆனால் அவனவன் மதத்தின் உண்மைகளையும் உயர்வையும் முற்றிலும் அவனையறியும்படி செய்து திருடமான பக்தியுடன் அம்மதத்தினைப் போற்றச்செய்கிறது. அத்துடன் ஏனைய மதங்களும் யாவருடைய மதிப்புக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமானவையென்று தெரிவிக்கின்றது. ஓரே உற்பத்தி ஸ்தானத்திலிருந்து பிரவகிக்கும் நதிகள் அன்றோ வேறுபடும் சமயம் எல்லாம்? ஒன்றினுக்கொன்று முரண்பட்டவைகளாக எப்படி ஏற்படும்.

***

என்னைப்போல் சிற்சிலர் ஒரு காலத்தில் வெளிச்சமின்றி அக்ஞானமென்ற இருட்டில் தட்டுத்தடுமாறித் தத்தளித்தோம். உலகத்தில் நிகழும் துன்பத்தாலும் துக்கத்தாலும் மயக்குண்டு மனிதனுக்கு உய்யும் வழியுண்டோ என்று வழியறியாமல் திகைத்தலைந்தோம். நாஸ்திகராய் திகைத்தவர்க்குத்தான் பிரஹ்மக்ஞானத்தின் அருமைதெரியும். வெயிலில்

திரிந்தவர்க்குத்தான் நிழலின் அருமை தெரியும். எங்களில் சிலர், மிகுந்த ஏழைகளுக்காக உழைத்துவரும்பொழுது அகாரணமாய் அவர்கள் பட்ட கஷ்டத்தைப் பார்த்து அவர்களை பரிசுத்தமாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் ஆக்க முடியுமோ என்ற ஏக்கத்தால் மனமுறிந்தோம். முற்காலத்தில் மதஸ்தாபர்களான மஹாத்மாக்களைப் பற்றி சரித்திரவாயிலாகத்தெரிந்தோம். இந்துதேச இதிகாசங்களைப் படித்தால் மகரிஷிகள் மனிதனால் அடையவேண்டிய பேரின்பப் பேற்றையடைந்தவர்களானாலும், ஸம்ஸார பந்தத்தினின்று விடுபட்டவர்களானாலும், மோக்ஷத்தின் பேரின்பத்தை நுகர்ந்தவர்களானாலும், அவர்கள் ஆநந்தமாகக் காலத்தைக்கழிப்பதை ஒழித்து உலகத்தை உய்விக்கும்படி செய்வதற்காக உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டு அரசர்களுடைய சபைகளில் போய் அவர்களுக்கு நன்மதி யூட்டியும், சாதாரண ஜனங்களிடத்தும் சென்று அவர்களையும் நல்வழி நடாத்தியும், வந்திருக்கின்றனர் என்று அறிந்தோம். ஆனால் 19-வது நூற்றாண்டில் ஜன சமூகத்தைப்பார்த்தால் ஒருவரோடொருவர் போட்டி போடுபவர்களாயும் சண்டையிடுபவர்களாயுமிருந்தார்கள். வலியவன் எளியவனை மாய்ப்பது சகஜமாயிருந்தது. அந்நிலைமையானது சரியல்லவென்று மட்டும் கூடமாயறிந்த என்னைப்போன்ற சிலர் தம்மால் கூடியவரை ஜனசமூகத்திற்காக உழைப்போம் என்று தீர்மானித்து உழைத்துவந்தோம். நாமிறந்துபோனாலும் நம்முடைய சவத்தின் மேல் நடந்தாவது அடிமைக் கடந்து சுதந்திரத்தையும் சுகத்தையும் ஏனையோர் அடையட்டும் என்று உழைத்தோம். அக்காலத்தில் பிரஹ்மக்ஞானத்தை நான் அறிய பாக்கியம் அடைந்தேன். உலகத்தில் பெறக்கூடிய பாக்கியங்களனைத்திலும் ஞானப்பேற்றைப் போன்றது எது? உலகமானது என்ன காரணத்தால் துன்புறுகிறது என்றும், இருளினின்று வெளிச்சத்துக்குப் போகும் வழி எது என்றும், பிரஹ்மக்ஞானம் போதித்தது. உலகத்திற்கு மூத்த சகோதரர்களான மகான்கள் இன்னும் இருக்கிறார்கள். உலகத்தைத் தன்படியாய்ப்போகும்படி விட்டுவிடவில்லை. முன்னர்ப்போல இக்காலத்திலும் அவர்களே உல

கினைப்பாதுகாத்து நடத்திவருகின்றனர் என்ற சந்தோஷ கரமான சமாசாரத்தினை நான் அப்போது தான்அறிந்தேன். நம்முடைய குறுகிய பார்வைக்கு மிகவும் துக்ககரமாகத் தோன்றிய உலகத்தில் ஈசுவரனுடைய நியதியானது நிறை வேற்றப்படுவதை அறிந்தேன். விஷய ஆனந்தம் என்ற மாயையை விண்டேன். மனதும் விசாலமான பார்வையை க்கொண்டது. ஹெலினம்பாள் பிளவாட்ஸ்கி என்ற உத் தமியின் அருள்நோக்கால் எப்போலியர் கண்ணும் திறந்து உலகத்தையே பந்தத்திலிருந்து விடுவிப்பதற்காக ஈசுவரன் உழைத்துவரும் நியதியை ஒருவாறு அறியச்செய்தது.

***

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சிலும் அமெரிக் காவிலும் இரண்டு அரசாட்சிகள் மாறுதல்களையடைந்தன. அவை தாமாய் நிகழ்ந்தனவல்லவென்றும் சர்வ நியந்தாவா ன ஈசுவரனுடையவும் அவனது சேவகர்களான நமது உத்த ம சகோதரர்களுடையவும் ஆணைப்படி அவை நிகழ்ந்தன வென்றும் அறிந்தோம். பிரான்சில் நடந்த அரசாட்சி மாறு தல்களுக்கு முன் பல வருஷங்களாக ஜீவன் முக்தர்களின் சிஷர்களான பலர் பிரான்சு முழுவதிலும் அலைந்து திரிந்து ஐரோப்பாவிலிருந்த அரசர்களை நல்வழிப்படுத்த முயன் றார்கள். சுதந்திரத்தை அடையவேண்டும் என்ற ஆசையா னது எங்கும் பரவியது. அவர்கள் ஜனங்களுக்கு சுகம் குன்றாமலிருக்கவேண்டும் என்று முயன்றார்கள். ஆனல் பிரான்சில் ஆட்சி மாறுதலானது கெடுதியை விளைத்தது போல் தோன்றியது. வெகுகாலமாக உண்ண உணவின்றி, உடுக்கத்துணியின்றி, அடிமைகளைக் காட்டிலும் அதிகக் கஷ்டப்பட்டு வந்த ஏழை ஜனங்களுக்குத் திடீரென்று சுயே ச்சையானது கிடைத்தவுடன் தேன்குடித்த நரிகள்போல் அவர்கள் கட்டுக்கடங்காதவர்களாய், வெறியர்கள்போல் நினைத்தவாறு, தலைவர்களை யெல்லாம் கத்திக்கிரையாக்கி னார்கள். சிலகாலம் இரத்தவெள்ளம் பிரான்சு தேசத்தில் ஓடிற்று. ஆசையால் சிறிது காலத்திற்கு கட்டுக்குள் அட ங்காத ஜனங்களை அடக்குவதற்காக ஒரு கொடுங்கோல் தனியரசனை நியமித்து அவர்களை அடக்கியாளவேண்டி நேர்ந்தது.

மிகவும் வறியர்களாயும், அடிமைகளாயும் இருந்தவர்களை உடனே சுதந்தரர்களாய்ச் செய்தவுடன், அவர்கள் அதுகாறும் பரர்களால் அடக்கப்பட்டவர்களாயிருந்ததாலும் தம்மை அடக்கியாளப்பழகவில்லையாகையாலும், தம்முடைய சுதந்தரத்தை மனம் போனபடி உபயோகிக்கலானார்கள். உலகத்தில் ஜனநாயகம் பெருகவேண்டும், ஜனங்கள் சுதந்திரர்களாகிச்சுகிக்கவேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தவர்கள் மனம் எல்லாம் புண்ணாகி அவர்கள் திகைக்கும் வண்ணம், ஜனங்கள் ஆட்சியானது தலைதடுமாறியிருந்தது. உலகக்ஷேமத்தின்பொருட்டே அப்படிப்பட்ட ஜனங்களை மறுபடியும் ஒரு தனியரசனுக்குள் அடக்கவேண்டியிருந்தது.

***

ஆனால் சற்றேறக்குறைய அதே சமயத்தில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் மறுகரையில் நிகழ்ந்த அரசாட்சி மாறுதலை உற்று நோக்குவோம். அங்கேயும் இதேவிதமான பகவத் உத்தேசத்தால் தான் மாறுதல் நிகழ்ந்தது. சுதந்திரம், சகோதரபாவம், என்ற அதே யுண்மைகள் அங்கும் பரவலாயின, ஆனால் அமெரிக்காவில் குடியேறியிருந்த ஜனங்கள் பிரான்சில் இருந்த குடிகளைக்காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவர்களாயிருந்தார்கள். ஐரோப்பாவில் கொடுங்கோல் மன்னர்களால் தம் மதவிஷயங்களில் செய்த நிர்ப்பந்தங்களைத் தாங்காது புதிய நாடு சென்று அங்கே தம் மதங்களையனுசரித்து கடவுளை வழிபடுதலே மேன்மையென்றும் புறப்பட்டுச்சென்ற மேன்மக்களின் வம்சத்தினர், பெரும்பாலும் சுயேச்சையாயிருந்தவர்கள், அறிவினர் மனனத்திடமும், தைரியமும் வாய்ந்தவர், இத்தகையாக அமெரிக்கர் இருந்தபடியால் அமெரிக்காவில் நிகழ்ந்த அரசாட்சி முறை மாறுதலானது பிரான்சில்போல் குழப்பமில்லாமல் சீராகவும் க்ஷேமகரமாகவும் நிகழ்ந்தது.

***

மேலேகண்டபிரகாரம் ஒரு தேசத்தில் நிகழ்ந்த பிறழ்ச்சியானது சிறிது காலத்துக்கு ஜனங்களுக்குக் கெடுதலாகவும், மற்றொரு தேசத்தில் நிகழ்ந்த பிறழ்ச்சியானது க்ஷே

மசரமாகவும் நடந்தது அவ்வத்தேசத்து ஜனங்களின் நிலைமையைப் பொறுத்ததாக இருந்ததுபற்றி ஜனங்களை முன்னேற்றமடையச்செய்யும் முயற்சிகளுக்கு முன்னதாகவே ஜனங்களின் மனதை விசாலப்படுத்துவதும், பரிசுத்தப்படுத்துவதும் முக்கியமாயிற்று. ஆகையால் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் உலகத்தை ஒருபடி உயர்த்துவதற்காக பிரயத்தனப்பட்ட பொழுது, அம்முயற்சியை ஏற்றுக்கொண்டவர்களும், ரிஷிகளின் உயர்நலம் வாய்ந்த சிஷ்யர்களுமான பெரியவர்கள் மிகவும்கவலையுடன் புராதனமான உண்மைகளை அக்காலத்துக்கு ஏற்றவாறு வெளியிடுவதில் உலகமானது எவ்விதம் படிப்படியாய் முன்னேற்றமடையவேண்டுமென்பதைத் துலக்கினார்கள். உலகத்தில் பாரமாத்மிக ஞானத்தைப் பரப்பவேண்டியதவசியமாயிற்று. அதற்காக ஒவ்வொரு சமயத்திலும் புதிய உற்சாகத்தையும், புதியபலத்தையும புதிய உண்மைகளையும் சேர்க்கவேண்டியதவசியமாயிற்று. மேற்கூறிய சிஷர்களுக்குப் பின் இருந்து அவர்களை கருவிகளாக வைத்து எல்லாக்காரியங்களையும நடாத்தியவர்கள் மானிட சங்கத்தின் உத்தம சகோதரர்களாகையால் அவர்களின் பிரபாவத்தாலும் சக்தியாலும் உலகமெங்கும் பாரமாத்மிகஞானமானது பரவிற்று. மேல்நாட்டில் கிறிஸ்து சமயததின் ரஹஸ்யார்த்தஞானம் பரவிற்று. ஹிந்து மதமும தன்னுரிமையான பெருமையையும, மேன்மையையும் அடைந்தது. பாரஸீகர் மதமும் தன பழைய மகிமையை மறுபடியும் அடைந்தது. கிறிஸ்தவ மதத்திற்கும் இவ்வுணர்ச்சி பரவிற்று. இஸ்லாம் மதமும் சொஞ்சம் இக்கிளர்ச்சியால் தாக்கப்பட்டது. மதங்களுக்கு விரோதிபோலிருந்த மேனாட்டு சாஸ்திரம் கூட வரவர இந்திரியங்களுக்குப் புலப்படாத வஸ்துக்களும் இருக்கலாம் என்று நம்பலாயிற்று. இப்போது சமயங்களுக்கு அனுசாரியாக இருக்கிறதென்று சொல்லக்கூடிய ஸ்திதிக்கு வந்துவிட்டது. அப்பால் வாலிபர்களுடைய கல்வி விஷயத்தில் புதியதோர் கிளர்ச்சி ஏற்ப

டவேண்டியதவசியமாயிற்று இக்காலத்து வாலிபர் தான் அல்லவா பின்னர் உலகத்தை மாற்றக்கூடிய புருஷர்களா யும் ஸ்திரீகளாயும் ஆகக்கூடியவர் ?

***

இவ்வளவு அஸ்திபாரத்துக்குப் பிறகுதான் உலகத் தில் ஜகத்குரு தோன்றப்போகிறார் என்று உலகமெங்கும பறைசாற்றப்பட்டது. புதிய நாகரீகத்தைத்துவக்கவும், மனிதர்களின் அபிவிருத்தியில் புதிதாய் ஒரு படியைத்துவ க்குவதற்காகவும் லோககுரு அவதரிக்கப்போகிறார் என்று முழக்கப்பட்டது. அவர் வருகையை துரிதப்படுத்தவும் அதற்கு இடையூறாகவுள்ளவைகளை மாற்றவும் வேண்டிய தவசியமாயிற்று. புதியதோர் மேன்மையானது வருங்கால த்தில் ஏற்படப்போகிறதென்றோம். ஆகையால் வருங்கால த்திறகும் உபலக்ஷணமாகவிருக்கும் உண்மைக்கும் சென்ற காலத்திற்கு உபலக்ஷணமாகவிருக்கும் உண்மைக்கும் ஓர் போரை மூட்டி ஒன்றோடொன்று தாக்கி பிந்தியதை மாள வும் முந்தியதை மீளவும் செய்யவேண்டியதவசியமாயிற்று. சென்ற காலத்திற்கு அறிகுறியாக யிருந்த உண்மையாதெ னில் "பலம்" ஒரு காலத்தில் உலகத்தை பலத்தால் அட க்கியாள்வேண்டியதவசியமாயிருந்தது என்பதை ஒருவரும் மறுக்க இயலாது. ஒரு தேசத்தாரை நிர்ப்பந்தப்படுத்தி அவர்களை பரதந்திரர்களாகச் செய்யவேண்டியிருந்தாலும், பலத்தால் ஆளவேண்டியதவசியமாயிருந்தது. பலத்தினால உலகத்தில் செய்யவேண்டியிருந்த காரியம் முடிந்து விட் டது. பகவத்கிருபையால் இப்போது போர்முடிந்து விட் டது. அதற்கு வெகு காலத்துக்கு முன் நான் கூறியிருந்த மொழிகளை ஞாபகப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

(தொடரும்).

ஆர். ரெங்கசாமி ஐயர்.

தியாஸஃபியால் உள்ள பிரயோஜனங்கள்.

தியாஸபி என்பது ஏதோ ஒரு புதுமதமென்பதாகவும் இது ஒரு பிரத்தியேக சாகை என்பதாகவும் சிலர் துரபிப்பிராயத்தை அடைந்திருக்கிறார்கள். அது சரியன்று. தியாஸபி என்பது வேறொரு மதமாவது, சாகையாவது, சித்தாந்தமாவது அன்று. இது எல்லா மதங்களின் ஸாரம் மூலம். இதில் எல்லாமதஸ்தர்களும் சேர்ந்திருக்கிறார்கள். ஆனதுபற்றி இது வேறு சாகையன்று. எல்லா சித்தாந்தக்காரர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனதுபற்றி இது புதிய சித்தாந்தமும் அன்று. ஸர்வஸகோதர பாவத்தை அங்கீகரித்துத் தத்வவிசாரத்தைப்பண்ணி ஸ்வயமான பரீக்ஷை அப்பியாஸங்களாலே ஸ்வானுபவத்திற்குக் கொண்டுவந்தவற்றை உலகத்தில் பிரசுரப்படுத்தி ஸகோதர ஸேவை செய்யவேண்டுமென்பதாக ஆஸக்தியுள்ளவர்கள் சேர்ந்திருக்கும் ஸமாஜம் தியஸாபிகல் ஸொஸைட்டி என்னப்படும். தியாஸபி என்பது சாசுவதமான, அனந்தமான பிரஹ்மஞ்ஞானம். தியஸாபிகல் ஸொஸைட்டி என்பது பிரஹ்மஞ்ஞானத்தை இப்போதைய தேசகால வர்த்தமானங்களுக்கு அனுகுணமாக பிரபஞ்சத்தில் போதிப்பதற்கு ஏற்பட்ட ஒரு முகமென்பதாகச் சொல்லக்கூடும். பிரஹ்மவித்தைக்கு இது ஒரு முகம் மாத்திரமன்று, அனேக காலதேச சந்தர்ப்பங்களில் இது நானாமுகங்களாகப் பிரசுரத்தை அடையும்.

1. இது மானிட ஜன்மத்தின் உத்தேசத்தைக் காட்டும். தியாஸபியால் ஜனங்களுக்கு விசேஷப் பிரயோஜமிருக்

கிறது. முதலாவதும் கேவலம் முக்கியமானதுமான பிரயோஜன மென்ன வென்றால்'— ஏதோ உலகத்தில் ஜனித்திருக்கிறோம். எப்படியோ ஜீவனம் செய்யவேண்டும், பத்துப்பெயர்களுடன் பதினோராம் பெயராக இருப்போம். மேலும் எப்படியோ அவர்களுடன் கூட இருந்து காலக்ஷேபத்தைச் செய்யின் சரி, தெரிந்தோ தெரியாமலோ சில வார்த்தைகளை (மந்திரங்களை) ச்சொல்லிக் கார்யங்களைப்பார்த்தால் நாம் செய்யவேண்டிய கார்யம் முடிந்தது வென்பதாகப் பலவிதங்களாய் லக்ஷியமில்லாத அபிப்பிராயங்களோடு இருப்பதை விட்டுத் திருப்பி மனிதனெவன் ஏன் ஜனித்தான், எப்படி ஜனித்தான், எங்கிருந்து வந்தான், இப்பொழுது செயயவேண்டியதென்ன, அதற்கு இப்பொழுது நமக்கிருக்கும் ஸௌகரியங்கள் எவை, பிரதிகூலங்கள் எவை, பிரதிகூலங்களை ஒழித்து ஸௌகரியங்களை விருத்தி செய்து கொண்டு நமது லக்ஷியங்களை நாம் அடையும் உபாயம் என்ன? என்ற விசாரங்களை நிஷ்கரிஷையாகவும் ஸ்பஷ்டமாகவும் உள்ளங்கைக் கண்ணாடிபோல் காட்டும். ஆரம்பத்தில் எழுதப்பட்ட தியாஸபி என்ற வாசகத்தில் இதை கொஞ்சம் மட்டும் தெரிவிக்கிறேன். இனி எழுதப்படும் வாசகத்தில் இதைக்குறித்து விசேஷமாக விரிதுக்காட்டப்படும்.

2. தியாஸபி மனச்சுகம், சந்தோஷங்களை விருத்தியடையச் செய்யும். எவ்விதமெனின்:—

(1) ஜனங்களிடத்தில் பரஸ்பரப்பிரேமையை அதிகரிக்கச்செய்யும்.

எல்லோரும் ஒரே பிதாவான கடவுளின் குழந்தைகளானபடியால் எல்லோரும் சகோதரர்கள். சகோதரர்கள் வெளிவித்யாசங்களைக் குறித்து சண்டையிடாது அன்யோன்யப் பிரேமையை எவ்விதம் விருத்திசெய்து கொள்ளக் கூடுமோ அதைக்காட்டி அதன் துவாரா சந்தோஷங்களை அபிவிருத்திசெய்யும்படி நமக்குப் போதிக்கிறது.- பிரபஞ்சத்திலுள்ள இத்தனை விதங்களான மதங்கள், பாஷைகள்,

ஜாதிகள், குலங்கள், வர்ணங்கள் முதலான பேதங்களைப் போக்கடித்து ஒன்றாய்ச் செய்வதற்கு எவருக்கும் ஸாத்தியப்படாது. ஆனாலும் வெளியில் எத்தனை வித்யாசங்கள் இருந்தாலும் எல்லாவற்றினுடைய ஸாரம் எல்லோருக்கும் எவ்விதம் ஸமானமென்பதைக் குறித்துக் காட்டுவதின் துவாரா எல்லோரிடமும் பரஸ்பரப்ரீதியை அதிகப்படுத்தும். இதுவுமன்றி வெளியில் இவ்வளவு த்வேஷம் அசூசையைகளுக்குக் காரணமாகவிருக்கும் இத்தனை விதங்களான வித்தியாஸங்களே எவ்விதம் சுகசந்தோஷங்களை விருத்தி செய்வதற்கு ஸஹாயகாரிகளாகச் செய்யக்கூடுமென்றும் காட்டும். பிரபஞ்சத்தில் ஸகலலோஹங்கள், ஸஸ்யாதிகள், பிராணிகள், மனிதர்கள் முதலான ஸமஸ்தங்களும் ஒரே வர்ணமாக இருக்கின் அழகோ அல்லது ஒவ்வொருவிதமான அழகுள்ளதும், மனோஹரமானதும் சுத்தமானதுமான வேறு வேறு வர்ணங்களாயிருந்து ஒவ்வொன்றும் மற்றவைகளின் அழகை அதிகப்படுத்தல் நன்றோ? ஆலோசியுங்கள். எப்பொழுதும் ஒரே ஸ்வரத்தைப் பாடிக்கொண்டிருந்தால் சுகமா? வெவ்வேறு இனிமையான ஸ்வரங்களைப் பலவிதங்களாகப் பேதித்து ஸமரசமாகவிருக்கும்படி சேர்த்து அநேகவிதங்களான ராகங்களாகப் பாடிக்கொண்டிருந்தால் சுகமா? எப்பொழுதும் ஒரே விதமான பதார்த்தத்தைத் தின்பது ஹிதமா? அல்லது வெவ்வேறு ருசியுள்ள உப்பு, புளி, காரம் தித்திப்பு முதலிய அறுசுவைகளை அநேக தினுசுகளாக உற்சாகமுள்ளவைகளாயும் ஆரோக்கியத்தை விருத்திசெய்யக்கூடியவைகளாயும் இருக்கும்படிக்கு வெவ்வேறு விதங்களாகக் கலந்து ரஸம், குழம்பு, பச்சடி, துவையல் முதலிய நானா விதங்களான பக்ஷியபோஜியங்கள் முதலாயுள்ளவைகளாகச் செய்து சாப்பிடல் ருசியா? பகவான் இத்தனை விதங்களான வர்ணங்கள், ருசிகள், அபிப்பிராயங்கள், ரூபங்கள், தோற்றங்கள் முதலாயுள்ள பேதங்களுள்ள மனுஷ்ய ஸமூகத்தை சிருஷ்டித்திருக்கிறார். இவையெல்லாம் விவேகத்தால் எவ்விதம் சுகசந்தோஷங்களை விரு

த்திப்படுத்த உபயோகப்படுத்தலா மென்பதை தியாஸபி சுலபமாக அறியக்கூடியதாய்க் காட்டுதல்ஒருபிரயோஜனம்.

(2) இதரார்களிடத்துள்ள ஸத்குணங்களைத் தேடச்செய்து சிநேகிதர்களை அதிகப்படுத்தும்.

பிரபஞ்சமெல்லாம் ப்ரகிருதி புருஷஸம்யோகத்தாலே ஏற்பட்டிருக்கிறது. கடவுள் எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறார். அவர் கல்யாணகுண ஸம்பூரணன். ஆனது பற்றி பிரதிமனிதனிடத்திலும், வஸ்துவினிடத்திலும் ஏதேனும் ஒரு நல்லகுணம் இருக்கவே செய்யும். பிரகிருதி லேபமுள்ளது. ஆகையால் தான் பிரதிவஸ்துவினிடத்தும் ஏதேனும் ஒரு லோபம் இருக்கவே செய்யும். உள்ளிருக்கும் மனிதன் ஈசுவராம்சம். ஆனதுபற்றி வெளியில் பிரகிருதிமயமான சரீரங்களிடத்து எத்தனை லோபங்களிருக்கினும் உள்ளில் பகவத் அம்சமான ஜிவன் இருப்பதால் நல்லகுணம் இருக்கவே செய்யும். வேண்டிய அளவு பிரயத்தனப்பட்டுத் தேடினால் எவ்வித அயோக்கியனிடத்து ஆகட்டும் ஏதேனும் நல்லகுணங்கள் அகப்படும். எவரிடம் நாம் ஸத்குணங்களைத் தேடுவோமோ முடிவில் நமக்கு அவர்கள் சிநேகிதர்களாவது ஸஹஜம். சிநேகிதர்கள் அதிகரிக்கும் பொழுது எல்லாம், சுகசந்தோஷங்கள் அதிகரித்தல் ஸ்வாபமே. ஆனதுபற்றி தியாஸபி இதரார்களிடத்துள்ள குணங்களைப் பார்க்கக்கூடியதாய்ச் செய்வதின் துவாரா அவர்களைச் சிநேகிதர்களாகச் செய்து சுகசந்தோஷங்களை அதிகப்படுத்தும்.

(3) சக்தியை விருத்தி செய்வதால் சுக சந்தோஷங்களை விருத்திப் படுத்தும்.

மனச்சக்தியை நாம் பிரயத்தனம் செய்யாமல் தனக்குத் தானாக ஸ்வபாவ மார்க்கத்தில் வளர்வதற்கு மனதை விடின் அதனிடத்துள்ள கிரஹண, பரீக்ஷா, தாரண, தாரதம்யஞான, ஆலோசன, கல்பன, தியான, விமர்ச முதலாயுள்ள அனேக சக்திகளில் ஒவ்வொரு சக்தியும் பிரபலப்படவேண்டியிருக்கினும் அனேக ஜன்மங்கள் வேண்டியிருக்கும்.

சுகதுக்கங்களுக்கு மனதே காரணம். மனச்சக்திகள் விருத்தியடைந்து ஸத்விநியோகம் ஆகும்பொழுதெல்லாம் சுகம் விருத்தியாகும். அது எவ்வளவு அதிகமாய் எவ்வளவு சீக்கிரத்தில் விருத்தியாகுமோ அவ்வளவு ஆனந்தம் உண்டாகும். தியாஸபி அந்தர் முகமாயுள்ள மனஸ்வபாவத்தையும், ஸ்வரூபத்தையும், லட்சணத்தையும், தர்மத்தையும் பிரபாவத்தையும், பிரயோஜனங்களையும் தெரிவிக்கும். அவைகளை சுத்திசெய்யும் கிரமங்களையும் விருத்திசெய்யும் கிரமங்களையும், ஸ்வாதீனப்படுத்திவைத்துக்கொள்ளும் கிரமத்தையும், சரியான மார்க்கத்தில் உபயோகிக்கும் கிரமத்தையும் இவைகள் எல்லாவற்றையும் தெரிவிக்கும். ஸ்வபா விதிகளை அனுசரித்து எவ்விதம் இவைகள் எல்லாவற்றையும் அப்பியஸித்து சீக்கிரத்தில் அந்த சக்திகளை அடைதல் ஸாத்யமென்ற மார்க்கத்தைக் காட்டும்.

அழகு அமையப்பெற்ற சக்தியைப் பெருக்கும். வஸ்துக்களிடம் எவ்வளவுக்கெவ்வளவு அழகு அதிகமாயிருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு ஆனந்தம் அதிகமாயிருக்கும். ஆனல் வஸ்துவினிடம் எவ்வளவு அழகிருக்கினும் அவற்றைக் கிரஹித்து ஆனந்திக்கும் ஸாமர்த்தியமில்லாத மனிதனுக்கு விசேஷ ஆனந்தம் கிடைக்கமாட்டாது. அதிசயமான அனேக விதங்களான ஸங்கதிகள், ராகம், சாயை, மூர்ச்சைகளோடு கூடின சங்கீத் ஸ்வாரஸ்யத்தை ஸங்கீத வாஸனையேயில்லாதவன் எவ்விதம் அறிந்து சந்தோஷிப்பான்? வர்ணங்களின் அழகே அறியாதவன் சூர்யோதய சூர்யாஸ்தமன வர்ண விசித்திரத்தை எவ்விதம் சிலாக்கிக்கக்கூடும்? பேச்சுகளின் அர்த்தம் அன்வயங்களையே அறியாதவன் அதிமதுரமான கவியின் விசேஷத்தை எவ்விதம் கிரஹித்து சுகிக்க இயலும்? இவைகளின் ஸ்வாரஸ்யத்தை அறிந்து ஆனந்திப்பதற்கு வேண்டிய ஸங்கீத ஸாஹித்யம் முதலியவைகளிடத்து சாமர்த்தியம் அதிகரிக்கும் பொழுதெல்லாம் அவகாசமும் அதிகரிக்குமல்லவா? இவைகளிடத்துள்ள அழகை உள்ளுக்கு வாங்கி அறியும்பொழுதெல்லாம் ஸந்தோஷம் அதிகரிக்கும்

தியாஸபி இவ்வித சக்தியை விருத்திப்படுத்தும். இது ஒரு பிரயோஜனம். இவ்விதமே ஸகலசக்திகளையும் விருத்திசெய்வதற்குச் சஹாயத்தைப் பண்ணும்.

(4) ஞான விருத்தித் துவாரா சுகசந்தோஷங்களை அதிகப்படுத்தும். நாம் சம்பாதிக்கும் சாசுவதமான சக்திகளெல்லாம் எப்பொழுதும் சாசுவதமாக நமது பக்கத்திலிருக்கும் வேண்டிய பொழுது உபயோகித்து அனுகூலம் பெறலாம் என்ற ஞானத்தை அளிக்கும்.

பிரபஞ்சம் நாயகனில்லாமல் இல்லை. நமது இஷ்டப்படி செல்வதுமில்லை. ஸர்வசக்தி, தயை, ஞானாதி ஸகல குண ஸம்பூரணனான ஈசுவரனுடைய ஸங்கல்பானுஸாரமாகவே இப்பிரபஞ்சமெல்லாம் நிகழ்கின்றது. அவரே இவைகளையெல்லாம் சிருஷ்டித்து ரக்ஷித்து எப்பொழுதும் உத்தம கதிக்குக்கொண்டு வந்து கொண்டிருப்பாரென்றும் காட்டும். பிழை, சூது, அன்யாயமென்பதாக வெளியில் புலப்படும் விஷயங்களிலும் கூட உள்ளுக்குச் சென்று பார்க்கின் அவைகளில் நின்றும்கூட பிரயோஜனமிருக்கென்பதாகவும், பகவானும் அவருடைய பிரதிநிதிகளான தேவர்களும் ரிஷிகளும் உலகநன்மைக்காக அவைகளைக்கூட உபயோகப்படுத்திக் கொள்வார்களென்பதாகத் தெரிவிக்கும். திருடனிடத்துள்ள விழிப்பும், சூதனிடத்துள்ள பிரட்டும், வஞ்சகனிடத்துள்ள சமத்காரமும் இவையெல்லாம் பகவானுடைய குணங்களே. ஆனால் தப்பு வழிகளில் உபயோகிக்கப்பட்ட கடவுள் சக்திகளென்பதாகத் தெரியும். விஷமானது மனிதனை இயற்கையாகக் கொல்லும். சில விதமான ரோகிகளுக்கு அந்த விஷமே அமிர்தப்பிராயமாகி ரோகத்தைப்போக்கடித்து அவர்களை ஜீவிக்கப்பண்ணும். சாம்பல் சாணி முதலான ஆபாச பதார்த்தங்களும் வைக்கோல் முதலியவைகளும் குவித்திருக்கும் வரைக்கும் ஆரோக்கியக் குறைவிற்குக் காரணமாகும். அவைகளைத் தோட்டம் வயல்களுக்கு எருவாக உபயோகிக்கின் பயிர்களுக்கு அதிக உத்தமமான உணவாகப் பரிணமி

க்கும். இந்தப்பிரகாரம் பிரபஞ்சத்தில் அத்யந்த துஷ்ட வஸ்துக்கள் குணங்கள் சக்திகள் எல்லாம் எவ்விதம் உலக நன்மைக்கே உபயோகப்படுத்தப்படு மென்பதாகவும் எல்லாம் அவசிய மென்பதாகவும் காட்டுவதின் துவாரா தியாஸபி ஈசுவர மஹிமையையும் ஸாமர்த்தியத்தையும் எடுத்து காட்டி ஆனந்தத்தை அதிகப்படுத்தும்.

(5) எல்லோருடைய சுகமே தனது சுகமென்பதாகக் காட்டும்.

தேஹத்திலுள்ள பிரதி அணுவினிடத்தும் ஒரு விதமான பிராணனிருக்கும். இவ்வித லக்ஷாதி லக்ஷ அணுக்கள் சேர்ந்து பல விதங்களான அவயவங்கள ஏற்பட்டிருக்கின்றன. இந்த அவயவங்கள் எல்லா வற்றோடும் கூடின தேஹத்தில் இன்னொரு விதமான பிராணனிருக்கும். அது இந்த சரீரத்தைப் பிழைத்திருக்கும்படி செய்துவரும். மொத்த தேஹத்திற்கு மேன்மையாயுள்ளதெதுவோ அது எல்லா அவயவங்களுக்கும் சிரேஷ்டமாயிருக்கும். இந்தப் பிரபஞ்சமெல்லாம் பகவானுடைய தேகமாயிருக்கும். சுத்தரத்தத்தில் ஒரு துளி விஷத்தைப் போட்டால் அது சரீரமெல்லாம் வியாபித்து எல்லா அவயவங்களுக்கும் வியாபித்து சரீரத்திற்கெல்லாம் உபத்திரவத்தை உண்டு பண்ணும், ஒரு துளி அமிர்தத்தைப் போட்டால் சுகத்தை உண்டு பண்ணும். இவ்விதமனேக ஜனஸமூக மென்ற தேஹம், மானிடவர்க்க மென்ற தேஹம், பிரபஞ்ச மென்ற தேஹம், இவைகள் கூடிய மொத்த தேஹத்திற்கு சுகமெதுவோ, அது ஒவ்வொரு அவயவத்திற்கும் சுகமாக இருக்கும் வண்ணம் ஜனஸமூகத்திற்கும் தேசத்திற்கும் எது மேலானதோ அதுவே பிரஜைகளுக் கெல்லாம் மேலானதாயிருக்கும். ஆனதுபற்றி எல்லோருடைய நன்மையே தன்னுடைய நன்மை, எல்லாருடைய சுகமே தன்னுடைய சுகம் என்பதாகத் தியாஸபி முக்கியமாய் போதிக்கும்.

3. நமது துக்கங்களைக் குறைக்கும்.

(1) நிஷ்காரணம், அன்யாயம் என்றவார்த்தைகளின் தத்துவங்களைக்காட்டி துக்கங்களைக் குறைத்து நிவிருத்தி செய்யும்.

பணக்காரன் துக்கப்பட்டுக்கொண்டிருப்பதும், ஏழை சந்தோஷசித்தனாகி இருப்பதும், நல்லவன் கஷ்டப்படுவதும், துஷ்டன் சுகப்படுவதும், நல்லகாரியத்தைச் செய்ய யத்தனிப்பவனுக்குக் கெடுதலும், பிரதிகூலமும், கெட்டகார்யத்தைச் செய்பவனுக்கு அனுகூலமும், கஷ்டப்பட்டு நியாயமாக வேலை செய்பவனுக்குத் தரித்திரமும், சோம்பேரியாகி வஞ்சகம் செய்பவனுக்கு ஐசுவரியமும், குழந்தைவேண்டுமென்பதாக கண்ட தேவதைகளுக்கெல்லாம் பிரார்த்தனை செய்பவனுக்குக் குழந்தைகள் இல்லாமையும் பிள்ளை குட்டிகள் போதும் இனி வேண்டாம் இனி வேண்டாம் என்பவனுக்கு மேன்மேலும் குழந்தைகள் உத்பத்தியாவதும், அன்னபனாதிகளில் கேவலம் ஜாக்கிரதை யோடிருப்பவர்களுக்கு ரோகங்களும், ஸ்வேச்சையாய் நடப்பவனுக்கு திருடசரீரமும், யோக்கியனுக்கு அவமானமும், அயோக்கியனுக்கு ஸன்மானமும் இவைமுதலாயுள்ள பலவித அன்யாயங்கள் பிரபஞ்சத்தில் தென்படுகின்றன. இவைகளுக்குக் காரணங்கள், ஸமாதானங்கள், பரிஹாரங்கள், அறியாத அனேகர்கள் துக்கித்துக்கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எவ்விதம் உலகத்தில் நிஷ்காரணமாக ஏதுவும் நிகழ்வதில்லையென்பதாகவும், எவ்வித கார்யத்தைச் செய்வோமோ அதற்கு அனுகுணமான பலன் ஸம்பவிக்குமென்பதாகவும், இப்பொழுது கெட்டபலன் உண்டாவதற்குப் பூர்வம் எவ்வித காரணத்தை உத்பத்தி செய்திருக்கவேண்டுமென்பதாகவும், அதற்குப் பிரதிகிரியையாக இப்பொழுது எவ்வித காரியத்தைச் செய்யின் அந்தக் கெட்டபலன நாசமாகி நல்லபலன் உண்டாகுமென்பதைக் குறித்தும் மிகவும ஸ்பஷ்டமாகவும யுக்தியோடு கூடியதாகவும் காரணத்தோடு தெரிவிப்பதின் துவாரா தியாஸபி துக்க நாசத்தைச்செய்யும்.

(தொடரும்)

ராமச்சந்திர நாயுடு.

35-வது அத்தியாயம்.

நூதன சரீரங்களில் ஜீவனுடைய வாழ்க்கை.

சாதாரணமாய் ஏழு வயதாகும் வரை ஆத்மா தன்னுடைய நூதன ஸ்தூல சரீரத்தை முற்றிலும் சுவாதீனப்படுத்திக் கொள்கிறதில்லை. ஆனால் விகாஸ முறையில் மேற்போன ஆத்மாக்கள் விஷயத்தில் மேலே சொன்ன கால நிர்ணயம் குறைவு படுகிறது. அவர்கள் சில வருஷங்களுக்கு முன்னாலேயே முழுவதும் சுவாதீனப்படுத்திக் கொள்ளுகிறார்கள். காரண சரீரததில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் அறிவின் பெரும்பாகத்தைக் கொண்டுவந்து நூதன ஸ்தூல சரீத்திரத்தின் மூளையில் பதியும்படி செய்வார்கள். எவ்வித விஷயத்திலாவது மேதாவியாய்ப் பிறந்த ஒருவன் ஏழு வயதாவதற்கு முன்னமே தன்னுடைய அற்புதமான சக்திகளை அடிக்கடி காட்டுவதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக:— சங்கீத மகா வித்துவானான ஹாண்டல் என்பவர் தனக்கு ஏழு வயதாகு முன் அனேக கீர்த்தனங்களை இயற்றினார். அவருக்கு மூன்றரை வயதாயிருக்கும்போது பாதிராத்திரியில் எழுந்து பியானோ வாசித்து வீட்டில் தூங்கினவர்களை எல்லாம் எழுப்பி விடுவார். அந்தச் சொற்பவயதில் அவருக்கு யாரும் சங்கீதம் கற்றுக்கொடுத்ததில்லை. பூர்வ ஜன்மங்களில் அவர் சம்பாதித்த சக்திகளைத் தன்னுடன் கூடவே கோண்டு வந்தார்.

நமக்கு எவ்வளவு நல்ல உபாத்தியாயர்களிருந்தாலும் கற்றுக்கொள்ள எவ்வளவு சிரமப்பட்டு முயன்றாலும் இந்த ஜன்மத்தில் நம்மால் செய்யமுடியாத காரியங்களை வேறொருவன் கற்பிக்கப்படாமலே வெகு இலகுவாய் செய்யக்கூடுமாகில் அவனைப்பற்றி நாம் பொறாமைப்படுவது எவ்வளவு

முட்டாள்தனமென்று நாம் அறிகிறோம். எவன் ஒரு விஷயத்தைத் இலகுவாய்த் தெரிந்து கொள்ளுகிறானோ அல்லது கற்றுக்கொள்ளுகிறானோ அவன் இதற்கு முந்தின ஜன்மத்தில் அவ்விஷயத்தைக் கற்றுக்கொள்ளப் பலதரம் முயற்சித்தும் பல தரம் தவறிப்போயும் மறுபடி அனேகம் தடவை முயற்சித்தும் இவ்விதம் பயிற்சி செய்தவனென்று நாமறியவேண்டும். நாமோ அவ்விஷயத்தைக் கற்க இப்போது தான் ஆரம்பித்தவர்களாக இருக்கலாம். நாமும் அவனைப்போல் முழுச்சக்தியுடன் வந்து வெகு இலகுவாய் அக்காரியத்தைச் சாதிப்போம்.

நீ மனது நொந்திருக்கும் போது உன்னைப்போல் அவ்வளவு கூட காரியம் செய்ய முடியாத வேறொருவனைப்பார். உனக்குக் கர்வமும் வீண் பெருமையும் உண்டாகும்போது பெரிய கிரந்த கர்த்தாக்களையும் ஆலோசனைக் காரர்களையும் லோகோபகாரிகளையும் ராஜதந்திரிகளையும் பார்த்து அவர்கள் உன்னிலும் எவ்வளவு மேலான பதவியிலிருக்கிறார்களென்பதைக் கவனி. மேலும் கிறிஸ்து நாதரென்ன புத்தரென்ன இவர்களை நினைத்துப்பார். இவர்களும் வெகு ஜன்மங்களுக்கு முந்தி நீ இப்போது செய்வது போலவே விஷயங்களைக்கற்றுக் கொள்ள அதிகப்பிரயாசைப்பட்டு உழைத்தவர்கள். அவர்களைப்போலவே நீயும் ஆகக்கூடும். ஆகையால் தைரியமாயும் பொறுமையாயுமிரு.

மனது வேலை செய்ய நூதன மூளையுடன் கூடிய புதிய சரீரமும் மனதும் பூர்வ ஜன்மங்களில் கற்றுக் கொண்ட விஷயங்களை வெளிப்படுத்தவும் விகாசமுறையில் உன்னை ஒரு படி உயர்த்தவும் போதுமானதாயிருக்கிறது.

உன்னுடைய மூளையின் வலிமையும், தைரியமும், விடா முயற்சியும் மனச்சக்தியும் உலகத்தில் உன் வேலைக்காக ஏற்பட்டிருக்கும் அந்தஸ்தை உனக்கு தீர்மானம் செய்து வைத்திருக்கின்றன. மூளையில்லாத ஒருவனுக்கு ஒரு வித்

தியாசாலையின் பிரதம உபாத்தியாயர் உத்தியோகம் கொடுப்பது வீணாகும். உன் சரீர வடிவம் அதாவது உன் உருவத்தின் அழகு அல்லது அழகின்மையும் கூட சில உத்தியோகங்களுக்கு உன்னைத் தகுதியுள்ளவனாக அல்லது தகுதியற்றவனாகச் செய்யும். ஆனால் இவையெல்லாம் உனக்கு அனுகூலமாயிருந்த போதிலும் உன் தேக சௌக்கியம் மிகவும் அற்பமாயிருக்கும். அதினால் நீ வியாதி ஸ்தனாகவே ஜீவகாலத்தைக் கழிக்கும்படிக்கும் முன் ஜன்மங்களில் நீ சம்பாதித்த ஆச்சரியமான சக்திகளை உபயோகிக்க முடியாதவனாகவும் இருக்கநேரிடும். உன் நூதன சரீரங்களின் சக்திகள் எப்படியிருந்தாலும முன்ஜன்மங்களில் நீ விதைத்ததின் பலன்களைத்தான் இந்த ஜன்மத்தில் நீ அறுப்பாய் என்பதையும் முன் ஜன்மங்களில் உன் எண்ணங்கள் இச்சைகள் செய்கைகளினால் நீ அமைத்துக் கொண்ட சரீரங்களைத்தான் இந்த ஜன்மத்தில் அடைந்திருக்கிறாயென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

"தினை விதைத்தவன் தினையறுப்பான்,
வினை விதைத்தவன் வினையறுப்பான்"

என்ற பழமொழி இங்கு கவனிக்கத் தக்கது

வி. வெங்குசாமி ஐயர்.

புத்தகவிமர்சம்

(1) சென்னையில் கால் நடைகளைப் பற்றிய குறிப்பு. (2) சென்னையில் அவுரிச்சாயக் கைத்தொழில் (3) சென்னை வியவசாய இலாகாவின் 1918-ஆம் வருஷத்திய வருஷப் புத்தகம்:—இம்மூன்றும் வியவசாய இலாகாவால் எமக்கு அனுப்பப் பெற்றன. ஆங்கிலத்தில வெகு அழகானதாளில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கின்றன. முதல் புத்தகம் சாதாரண ஜனங்களும் உற்சாகமாகப் படிக்கக் கூடியது. மற்ற இரண்டும் சாஸ்திர பரிசயமுள்ளவர்களும், அவுரிச்சாய வேலையில் பழக்கமுள்ளவர்களும் மிகவும் ஆவலுடன் படித்து பயன் அடையக்கூடியவை.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

36-வது அத்தியாயம்.

நூதன சரீரங்களில் ஜீவனுடைய வாழ்க்கை—தொடர்ச்சி.

உலகமெங்கும் நடைபெறும் கர்மாதிகாரத்தைப் பற்றிய இந்த உபதேசத்தை நாம் பூர்த்தியா யறிந்தால் நமக்குப் பெரிய ஆறுதல் உண்டாகும். உன் வாழ்க்கையைப்பற்றி நீ அதிருப்தி யடைகிறுயா? அப்படியானுல் உன் ஸ்வபாவத்தை நன்ருய் ஆராய்ந்துபார். மிகவும் சிறுவர்கள்—அதாவது ஏழு அல்லது பத்து வயதுள்ள குழந்தைகள் கூட இதைச்செய்யக்கூடும். கோபப்படாமலும் அதிருப்தியடையாமலும் இருக்க என்னுல் முடியவில்லை. அது என் ஸ்வபாவம் என்று சொல்லாதே. நீ தனித்திருக்கும் போது உன் நெஞ்சகத்தில் உற்று நோக்கு. என்ன காரணத்தால் நீ விரும்பாத காரியங்கள் உனக்கு சம்பவித்திருக்கின்றனவென்று உன் திருப்திக்காகச் சோதித்துப்பார்.

நீ துன்பங்கள் நிறைந்த சரீரத்தோடு கூடின ரோகியாயிருக்கிறுயா? உன் ஸ்வபாவத்தை நேராகப்பார். அதில் குரூரம், பட்சமின்மை இவைகளின் ஒரு சிறு பாகமாவது இருக்கிறதா வென்று கவனி. முன் ஜன்மத்தில் குரூரமும் பட்சமின்மையும் உன் ஸ்வபாவத்தில் மிகவும் அதிகமாயிருந்து வேறொருவரை உபத்திரவம் செய்யும்படி தூண்டிவிட்டதின் பயனுக இந்த ஜன்மத்தில் துன்பமடைகிறுய்.

உன் சரீர உபாதியானது மட்டுக்குமிஞ்சி சாப்பிடுவதாலும் குடிப்பதாலும் உண்டானதா? பெருந்தீனி, பேராசை, விஷயானுபோக வெறி இவைகளின் சேஷமாவது வித்தாவது உன்னிடமிருக்கிறதாவென்று பார். அப்படியிருந்தால் மிதமான எண்ணங்களாலும் செய்கைகளாலும் அவைகளைக்கொல். இவ்விதமாய் அடுத்த ஜன்மத்துக்கு சௌக்கியமுள்ள சரீரத்தை அமைக்கும்படி கட்டளையிடலாம். இந்தக் குற்றங்கள் உன்னிடமில்லையென்று நீ யறிந்தால் வெகு காலத்துக்கு முந்தியே அவைகளை நீ ஜயித்துவிட்டாயென்றும் ஆனுல் இந்த ஜன்மத்தில் உனக்கு வாய்த்திருக்கும் ரோகமுள்ள சரீரத்தால் உண்டாகும் துன்பத்தை நீ பாராட்டாமலும் அல்லது உனக்கு வெறுப்புண்டாகி

அயோக்கியனுகாமலும் இருக்கிறாயா வென்று உன் மனோதிடத்தை சோதிப்பதற்காக மகா ஞாதாக்களான கர்மதேவதைகள் இவ்வித சரீரத்தை யுனக்குக்கொடுத்திருக்கிறார்களென்றும் அறியவேண்டும். நம்முடைய எல்லாவித சுகதுக்கங்களுக்கும் காரணம் இன்னதென்று அறிவதற்காக நம்முடைய ஸ்வபாவத்தைக் கவனித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய ஆழ்ந்த யோசனைகள் நாம் மட்டும் அறியக்கூடிய ரகசியங்களாயிருப்பதால் நம்முடைய ஸ்வபாவத்தை பாரபக்ஷமில்லாமல் யோக்கியதையாய் பரிசீலனை செய்யவேண்டும். நம்முடைய ரகசியங்களை இதரர்களறிந்து தப்பர்த்தம் செய்வார்களென்ற பயம் வேண்டாம்.

அற்ப விஷயத்தில் கூட உனக்குக் கோபாவேசம் உண்டாகிறதா? அப்படியிருந்தால் உன்னுடைய நூதன இச்சா சரீரத்தில் பரும்படியான பிரகிருதி அதிகமாயிருக்கிறதென்றும் அதினால் இதரர்களுடைய கோப அலைகள் உன் சரீரத்தைத் தாக்கின உடனே அதில் துடிப்புண்டாவதும் தவிர உள்ளேயிருந்தும் கோபம் பொங்கி இலகுவாய் வெளிப்படுகிறதென்றும் நிச்சயமாய் அறி. முன் ஜன்மத்தில் நீ கோபத்தை அடக்கவில்லை. நீ சுவர்க்க லோகத்தி லிருந்து திரும்பி புவர்லோகத்துக்கு வரும்போது முந்தி நீ விட்டுப் போன கோபம் நிறைந்த அணுக்களை உன் சரீரத்தில் ஸ்வீகரித்துக்கொண்டாய். அச்சரீரத்தில் அவைகள் சார்ந்துவிட்டமையால் இப்போது அந்த துர்க்குணத்தால் நீ உபாதிப்படைகிறாய்.

உனக்கு இன்பமுள்ள மக்கள் மனைவியருடன் கூடின வீடும், சௌக்கியமான சரீரமும், திருப்தியும் சந்தோஷமுமுள்ள ஸ்வபாவமும் உனக்கிருக்கின்றனவா? அப்படியிருந்தால் முன் ஜன்மத்தில் நீ இதரர்களுக்கு இன்பமான மனைகளை அடையும்படி உதவி புரிந்தும் உன் சரீர சௌக்கியத்திற் கவலையெடுத்துக்கொண்டும் அதிக விசனமும் துன்பமும் நேர்ந்திருந்தபோதும அதை சரியானவிதமாய் சகித்துக்கொள்ளக்கற்றுக்கொண்டும் அதாவது ஆங்காரம், பொறாமை யின்மை, பொல்லாங்கு இவைகளை விலக்கியும் இருந்திருப்பாய்.

வி. வெங்குசாமி ஐயர்.

இந்திய சாரணர் சங்கம்.

சிறுவர்களின்பயிற்சி முறையும், நம்நாட்டின்முன்னேற்றமும்.

(184-ஆம் பக்கத் தொடர்ச்சி)

---

4. ஜீவகாருண்யமும்; பரோபகாரம்:—ஆன்மகோடிகளின் விகாச முறைக்கு இவை இன்றியமையாதவை யாதலின் "இருப்பது பொய் போவது மெய் யென்றெண்ணி நெஞ்சே, ஒருத்தருக்குந் தீங்கினையுன்னாதே" என்ற பட்டினத்தாரின் திருவாக்கை யொட்டி நடப்பதோடு நம்மாலியன்ற அளவு பிறர்க்கு நாம் உதவி புரிய எச்சமயமும் தயாராயிருத்தல் வேண்டும்.

முற்கூறிய பயிர்ச்சியின் பொருட்டு "இந்திய சாரணர் சங்கம்" ஒன்று ஏற்பாடாகி, நமது நாட்டில் சுமார் இரண்டு வருஷகாலமாய் உலாவிவருகின்றது. இங்கிலாந்தில் ஏற்கனவே கௌரவம் பெற்றிருக்கும் சாரணர் சங்கத்தின் ஒழுங்குகளை அநுசரித்தே இச்சங்கத்தின் காரியங்களை யெல்லாம் சரிவர நடத்த மிஸ்டர் பியர்ஸ்(Mr. Pearce, B. A., Lond.) என்னும் ஓர் ஆங்கில சாரண சங்கத்தலைவர் நம் இந்திய சாரண சங்கத்தலைவராய் நியமனமாகி சென்னையில் இது சம்பந்தமாய் ஓர் புதிய மாதாந்தரப் பத்திரிகை வெளிப்படுத்தி, நம் சிறுவர்களுக்காக எவ்வளவோ உழைத்து வருகிறார். இச்சங்கத்தின் வாலிபப்பயிற்சி முறைகள் சுதேசியக் கல்வியைச் சார்ந்தனவேயாம். இச்சங்கத்திற் சேரும் வாலிபச்சாரணர் ஒவ்வொருவரும் நாடோறும் குறைந்தது ஓர் நற்செய்கையேனும் புரிவது அவசியமாகும்.

வாலிப சாரணர்பெறும் பயிற்சி முறைகளின் பயன்.

(1) கபாத் முதலிய சரீரப்பயிற்சியால் தேகசௌக்கியமும் சரீர வலிமையும். (2) இராஜபக்தி, குருபக்தி,

தேசாபிமானம். (3) அடக்கம், பொறுமை, மரியாதை சகோதரபாவம். (4) பிராணிகளிடத்து அன்பு, பரோபகாரம். (5) மேலோர்க்குக் கீழ்ப்படிந்து ஒழுகி நல்வழி நிற்றல். (6) உற்றுநோக்கல், விஷய ஆராய்ச்சி, யூகித்து அறிதல். (7) ஊக்கம், உற்சாகம் (8) நற்சிந்தனை, நல்வாக்கு, சத்யம், ஆசாரம். (9) உண்டி சமைத்தல். (10) லௌகிக மார்க்கத்திற்கு உதவியான தச்சுவேலை முதலிய தொழிற்படிப்புகளில் ஆரம்பப்பயிற்சி. (11) வீண் செலவு செய்யாமை, சிக்கனம். (12) தூரத்திலிருப்போர்க்கு துணி கொடிகள் மூலமாய்ச் செய்தியனுப்புதல். (13) கால் முதலிய தடங்களறிதல். (14) ஆரம்ப வைத்திய சிகித்ஸா முறைகளறிதல் (மயக்கம், நீரில் ஆழ்தல், வாந்திபேதி, வெட்டுக்காயம், தீப்புண், முறிந்த எலும்புமுதலிய) சுருக்கச்சொல்லின் இச்சங்கத்திற்கு சரிவரப்பயிற்சி பெறுவோர் 'சமய சஞ்சீவி' களே யாவர்.

பெற்றோர்களே! உபாத்தியாயர்களே! இச்சாரணர் சங்கத்தால், வரும்பயன்களை யறிந்து ஆங்கிலப் பிரபுக்கள் எவ்விதம் தம்மக்களை இச்சாரணர் சங்கத்தில் சேர்த்துப் பயன்பெறச் செய்கிறார்களோ அவ்விதமே நீங்களும் நம் சிறுவர்களை இதில் சேர்த்து பயற்சி செய்ய நீங்கள் தூண்டு வீர்களாயின், நீங்கள் நம் தாய் நாடு முன்னேற்றம் அடைய உண்மையிற் பாடுபட்டவரே யாவீர்கள். இங்கிலாந்தில தற்சமயம் இவ்வாலிப சாரணர்களுக்கு, இவர்களால் பொது ஜனங்களுக்கும் இராஜாங்கத்தாருக்கும் வாய்க்கும் பலவிதப் பேருதவியின்மாட்டு, நடக்கும் மரியாதையும் கௌரவமும் நமக்கும் கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் என்பதிற் சிறிதும் ஐயமேயில்லை.

சாரணர்களாகப் பயிற்சிபெற விரும்புவோர் 8 வயதுள்ள சிறுவர் முதல் பெரியோர் வரை சேரலாம்.

மூப்பினாலும் தொழில் மிகுதியாலும் பயிற்சி பெறக்கூடாத நகரவாசிகள் நம் சிறுவர்களின் க்ஷேமாபிவிருத்தியைக் கருதியேனும் சாரணர் சங்கத்தின் ஸ்தலச்

சங்க அங்கத்தினராய்ச் சேர்ந்து தங்களாலானவரை பலவழிகளிலும் வாலிப சாரணர்களுக்கு உதவி புரிந்தால் அதுவே ஈசுவர கைங்கர்யமாகும்.

சாரணர் பயிற்சிச்சங்கம் சிப்பாய்க் கூட்டமல்ல, சாரணர் பயிற்சிச்சங்கம் பொழுது போக்க வம்பு பேசி விளையாடும் கூட்டமல்ல; சாரணர் பயிற்சிச் சங்கம் சிறுவர்களை ஸத் புருஷர்களாக்க ஏற்பட்டுள்ள ஓர் மஹா சங்கமென அறியவேண்டியது அவசியம்.

இம்முதியோர் சங்கத்திலும், வாலிபர் சங்கத்திலும் சேரவிரும்புவோர் கீழ் கையொப்பமிட்டிருப்பவரிடம் நேரிலாவது கடித மூலமாவது தெரிவித்துக் கொள்ளலாம்.

பி. ஏ. சுப்ரஹ்மண்யம்,

வாலிப சாரண சங்கத்தலைவர்.

காக்காத்தோப்புத் தெரு

மதுரை.

புத்தக விமர்சம்.

பரதன்:—உத்தம சகோதரன். கணேஷ் கம்பெனி, சென்னை. விலை 8 அணா. பரதாழ்வானுடைய கதையைக் கம்ப ராமாயணத்தை யனுசரித்து எளிய நடையில் கூறும் இப்புத்தகத்தைப் படிக்கக் களிப்படைந்தோம். இராமனுடைய திருக்கதையும் அவன் தம்பிகள் வரலாறும் எத்துணை முறை கேட்டாலும் தெவிட்டா இயல்பையுடையன. ஆகையால் புதிதாக இப்புத்தகத்தை வெளியிட்டதற்கு அசிரியன் சமாதானம் கூறவேண்டுவதில்லை. புத்தகம் அழகாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

லோககுருக் கும்மி.

கும்மியடி பெண்காள கும்மியடி உள்ளம்
குளிர்ந்து கும்மியடியுங்கடி
குருநாதரானகுரு மைத்திரேயரைக்
குறித்துக் கும்மியடியுங்கடி.

சண்டையும் சச்சரவும் போதும் நம்மைச்
சார்ந்த கஷ்டங்களும் போதும்
சற்ஜனரோங்க வருகின்ற நம்முடைச்
சற்குருவை வரவேலுங்கடி.

பாமரர்க் காகப் பரிந்துவருகிற
பகவன் நல்வரவை நாடிப்
பாடுங்கடி லோக குருவின் வரவைப்
பாரிலுள் ளோர்க் கெலாம் ஓதுங்கடி.

சாதியும் ஒன்று சர்வேசனும் ஒன்றென்ற
சான்றோர் திருவாக்குப் பொய்யாமோ?
சாந்தி சகோதரம் சற்குரு சாற்றவே
சாந்தேவருகிறார் கேளாதை நீ.

வீடுதெரு சந்து பொந்துகள் யாவுமவ்
விண்ணோன் வரவை வெளிப்படுத்த
வெளியிலே வந்து மெல்லியர் யாவரும்
மேவிக் கும்மியடியுங்கடி.

மனித தேகமும் அதனாலடையும் பெரும்பயனும்.

ஸ்ரீ அகண்ட பரிபூரணச் சச்சிதானந்த சர்வேசுவரனது சிருஷ்டிக்குட்பட்ட எழுவகைப் பிறப்பினுள் மக்கட் பிறப்பே முக்கியமானது. கிடைத்தற்கரிய இம்மனித தேகத்தால் அறம், பொருள், இன்பம், வீடென்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் அடையவேண்டுமென, அநேக கிரந்தங்களில் தபோதனர்களாகிய மகான்களால் வரையறுத்துக் கூறப்பட்டிருப்பதை அறிஞர்கள் அறிவார்கள். இதை அநுசரித்தே

ஔவையார்.

அன்னத்தாலாய வுடம்பின் பயனாவதெல்லா
முன்னோனைக் காட்டிவிடும்.
தருமம் பொருள் காமம் வீடெனு நான்கும்
உருவத் தாலாய பயன்.
உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்.

சிவவாக்கியர்.

ஓடமுள்ள போதெலா மோடிபே யுலாவலாம்
ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ள [லாம்
ஓடமுமு டைந்துபோ மொப்பிலாத வெளியிலே
வாளுமில்லை கோலுமில்லை யாருமில்லையானதே.

வித்தில்லாத சம்பாதாய மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைந்தவாற தெங்ஙனே
பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதை [காள்
சித்திலாத போதுதான் சிவனில்லை யில்லையே.

அப்பர் சுவாமிகள்.

தேடிக்கண்டு கொண்டேன் திருமாலோடு நான்
[முகனுந்
தேடித்தேடொணாத் தேவனையென்னுளே தேடிக்
[கண்டு கொண்டேன்

தாயுமானவர்.

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதானியா
[தினுமரிதரிதுகா
ணிப்பிறவிதப் பினு லெப்பிறவிவாய்க்குமோவேது
[வருமோவறி கிலேன்.

என, திரிகால முணர்ந்த ஔவை பிராட்டியார் முதலியோர்களும் கூறியிருக்கின்றனர்.

நாம் உட்கொள்ளும் உணவானது சத்து வேறு அசத்து வேருகப் பிரிந்து சத்தான ரசதாதுவானது, உதிரம், மாம்சம், மேதை, ஆஸ்தி, மச்சை, சுக்கிலமென்றும் சப்த தாதுக்களாய் வரிசைக் கிரமமாய் அடைந்து, பிராணனை இரட்சித்து வருகிறது.

அன்னசத்தானது உட்புகாதவரையில், ஒருதொழிலும் செய்வதற்கு ஏதுவில்லை. பிராணனும் சரீரத்தில் நிலைத்திராது. இதைக் கொண்டே,

மானங்குலங் கல்வி வண்மை யறிவுடமை
தானந்தவ முயற்சி தாளாண்மை தேனின்
கசிவந்த சொல்லியர் மேற்கா முறுதல் பததும்
பசிவந்திடப் பறந்து போம்.

என நமது மூதாட்டியாரும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர்.

அன்னமய கோசமில்லாவிடில், பிராணமய கோசமில்லை. பிராணமய கோசமில்லாவிடில், முறை முறையே மனோ

மயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என்றும் கோசங்கள் இலவாம்-இல்லையாயின் நாம் எவ்விதம் உச்சீவிப்போம்.

இதை உணராத சிலர்கள், விருப்பமின்றிச் சகல பற்றுக்களையும் விட்டு ஏகோபிதமான சைதன்னியத்தில் கலந்தவர்கள் போல், சரீராபிமான மில்லாமல் அனித்தியமான தேகத்தினால் நாம் அடையும் பயனென்னவென்று அருவருத்துக் கொண்டதே கோலம் கண்டதே காட்சி என நினைத்து மிருந்த பசியை அடக்கியும், தேகத்துக்குஒற்றுமை இல்லாத அளவு மீறின ஆகாரம் முதலியவைகளை உட்கொண்டும், சதா சிற்றின்பக் கல்வியில் மூழ்கியும், ஸ்நான பானுதிகளை விலக்கியும், சுசி ஆசார நியமங்களைத் தவிர்த்தும் சர்வ சுகபாக்கியங்களைத் தரும் சுகாதார நீதி சாஸ்திர முதலியவைகளைக் கைவிட்டும், சாதுசங்க தெய்வவந்தனை வழிபாடு முதலியவைகளை நிவர்த்தித்தும், பலவித நோய்களால் பீடிக்கப்பட்டு மிக்கத் துன்புற்று வாதனை யடைந்து அருமையாய்க் கிடைக்கப் பெற்ற இம்மனித தேகத்தால் யாதொரு சுகமும் அடையாமல், சஞ்சல மனத்தால் பாப மூட்டையைக் கைக்கொண்டு எமதூதர்கள் கையில் சிக்குண்டு எமனுலகம் அடைகிறார்கள். அந்தோ மிகப் பரிதாபம். இதையனுசரித்தே

திருவள்ளுவநாயனர்.

அற்றால ளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடி துய்க்கு மாறு.
மாறுபாடில்லா தவுண்டி மறுத்துண்ணி
னூறுபாடில்லை யுயிர்க்கு.

அகஸ்தியமாகா முனிவர்.

நலுகுவ தோர்பிணிகள் வந்த வகையே தென்னில்
[நாடி வெகு பொசிப்பறியா நயத்தினாலே
சிலுகு பெறுதாபமுற்றுப் பணிகள் மீறும் தீனறி
[ந்து தின்பிராலப்பிணியோ யில்லை
கொலுவுடனே ஸ்திரீபோகஞ் செய்தாராகில் கொ
[டிய பிணிமிகுதியுறுங் குறையுந்தாது
வலுவறிந்து பொசிப்பறிந்து போகஞ் செய்தால்
[வல்பிணிக ளவரிடத்தில் வாராதன்றே
சத்தியமாம் பராபரமாம் ஒன்றே தெய்வம் சகல
[ருக்கும் சீவனுயிரது தானச்சு

புத்தியினாலறிந்தோர்கள் புண்ணியோர்கள்.

என ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர்.

(இன்னும் வரும்)

கே. எஸ் துரைசாமி பண்டிதர்.

புத்தக விமர்சம்.

சூளாமணி:—(வசனம்) ந. பலராமையர் இயற்றியது. கணேஷ் கம்பெனி, சென்னை. விலை ரூ 1—0—0. இது ஒரு வழி நூல். இதன் முதனூலாவது கவிஞர் பெருமானாகிய தோலா முனிப்புலவர் இயற்றிய அருப்பெரும் சூளாமணிக் காவியம். இவ்வருங்காவியத்தை முப்பது வருஷங்களுக்கு முன்னர் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் வசன நடையில் வெளியிட்டிருக்கிறார் எனினும் செய்யுணடையையே பெரும்பாலும் தழுவியதாய்த் திரிசொற்பிரயோகம் மிகுதியும் பெற்று, செந்தமிழ்ப்பயில அவாவினை யுடையார்க்கன்றி ஏனையோர்க்குக் கடினமான நடையுடையதாயிருத்தலின், அக்கதையினை எளிய நடையில் எழுதினாற் பலர்க்கும் பயன் படக்கூடியதாயிருக்கும் எனக் கருதி இவ்வசன நூல் எழுதப்பெற்றது என ஆசிரியர் முகவுரையில் கூறியுள்ளார். தமிழின் நடை மேலும் மேலும் சிறப்பினையடையக் கருதவேண்டுவது எவ்வொருவருக்கும் கடமையா

தலின் ஆங்காங்கு கடினமான சொற்களையும் சொற்றொடர்களையும் புகுத்தியிருப்பதாகவும் கூறுகிறார்.

இவ்வசன நூலின் பல பாகங்களில் ஆங்காங்கு முதனூலிலுள்ள அழகிய சொற்றொடர்களைத் தொடுத்திருப்பதிலிருந்து முதநூலை வாசித்துக் களிப்படையவேண்டும் என்ற அவாவினை ஆசிரியர் உண்டுபண்ணுகிறார். இதுவே வழி நூலின் முதற்கடமையாகும். "கோதிலா மாரி பெய்த கோடையங்குன்றம் போல" "மந்திர நீளுமாயின் வருவன வறியலாகா" இவைபோன்ற சொற்பொலிவுவாய்ந்த தொடர்கள் இவ்வசன நூலில் பொதிந்து கிடக்கின்றன. நடையும் மிகவும் கடினமாயிராமலும் மிகவும் எளிதாயும் இராமலும் அழகும் சிறப்பும் பெற்றிருக்கிறது. இதனை வெளிப்படுத்திய கணேஷ் கம்பேனியாரும் அரிய நூற்கு அழகிய ஆடையை யணியுவித்து வெளிப்படுத்தி யிருக்கின்றனர். ஆகையால் இதனை வாசிப்பதற்கு மனதிற்கு உற்சாகமுண்டாகின்றது.

முதநூல் காலத்திலேயே பெண்கள் அரசாட்சி கூடச் செய்ய வல்லமையுள்ளவராகக் கருதப்பட்டனர் என்றும், பெண் மக்களுக்குப் பற்பல கலை ஞானங்களையும் கற்பிப்பது வழக்கமென்றும், அவர்கள் நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்தவராயிருந்தன என்றும், சிறு பொழுதில் உருவத்தைப் பார்த்து துகிலில் உருவம் தீட்டும் வல்லபம் பெற்ற பெண்களும் இருந்தனர் என்றும், அவ்வுருவம் மெய்யுருவை யொத்திருந்த தென்று புகழ்ந்து அதற்காக அரசரும் அரசியரும் வேண்டிய பரிசிலளித்து ஆதரித்தனர் என்றும், அறிகிறோம். மகளுக்கேற்ற மணமகனை யாராய்ந்து தேறல் பெற்றோருடைய பெருங்கடனாகும் என்றும், மங்கையாற் காதலிக்கப் பெறாத ஒருவனை அவளுக்கு மணாளனாகத் தாய்தந்தையர் சேர்த்துவிடின் அம்மங்கை தன்னியல்பான நாணத்தால் தன் விதியைப் பற்றி தானே நொந்துகொண்டு நெஞ்சிற் புழுங்கி வருந்துவாளேயின்றி வெளியிட்டுக் கூறாள், என்றும் முற்காலத்திலும் பெற்றோர்கள் தம் கடமையை நன்குணர்ந்திருந்தனர் என்றும் அறிகிறோம்.

மேலும் ஆரம்ப முதல் அந்தம் வரை அருவருப்புக்கிடமான ஒரு எண்ணமாவது சொல்லாவது இல்லாது அழகிய சொற்களும், புனிதமான எண்ணமும் நிறைந்த இப்புத்தகத்தைப் படித்து மிகவும் மனமகிழ்ந்தனம்.

ஸ்ரீலலிதா நவரத்தினம் என்னும் மனையடி சாஸ்திரம்:—முதற் பாகம். புலிவலம் ஆர் கோபாலையர் விலை ரூ 1.

மேல்நாட்டு சாஸ்திரங்களுக்கும் நம் இந்திய சாஸ்திரங்களுக்கும் வித்தியாசம் என்னவெனில், மேல்நாட்டார் கட்புலனாகும் விஷயங்களைத் தவிர வேறு ஒன்றையும் அறியார். ஆனால் நம்முடைய கிரந்தகர்த்தாக்களோ ஒவ்வொரு காரியத்திலும் நவக்கிரகங்களின் பலன்களையும் ஸ்தூலக்கண்ணுக்குப் புலப்படாத தேவதைகள் யக்ஷஸ்கள், பிசாசுகள் முதலியவைகளுடைய பலன்களையும் கூறுகிறார்கள். ஆனால் முற்காலத்திய நூற்களில் இந்த இந்த மாதிரியான பூமிகளை விலக்கவேண்டும், இந்த இந்த சகுனங்கள் சுபம், இவை அசுபம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவைகளை அப்படிக் கூறுகிறதற்கு யாது காரணம் என்று காரணங்களைக் கூறுவதில்லை. ஆகையால் இக்காலத்தில் சாதாரண ஜனங்களுக்கு நமது சாஸ்திரங்களின் பொருளை அறிவது கடினமாகிறது. ஆனால் நவக்கிரஹங்களும் தேவதைகளும் துர் தேவதைகளும் ஒவ்வொரு காரியங்களிலும் சம்மந்தமற்றவைகள் இல்லையென்று மட்டும் நாம் ஸ்தூலமாக உணருகிறோம்.

இப்புத்தகத்தில் பற்பல புஸ்தகங்களினின்று மனையடிசாஸ்திரத்தைப் பற்றிக்கூறியுள்ள விதிகளைத் தொகுத்து அச்சிட்டிருக்கிறார். இது மிகவும் உபயோகமுள்ளது என்பதில் ஐயமில்லை.

ஆனால் நவீனச்சிற்பசாலைகளிலும் முக்கியமாய் தேசீய வித்யாசாலைகளிலும், வீடுகட்டுவதற்காக கற்பிக்கும் கலாசாலைகளிலும் நமதுபுராதன வாஸ்து சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து தற்காலத்திற்கு ஏற்ற உண்மைகளை நவீன மாதிரியில் கற்றுகொடுப்பார்களானால் மிகவும் சிலாக்கியமாகும். வாஸ்து சாஸ்திரத்தில் பயிற்சியுள்ள ஸ்தபதிகளும் சிற்பர்களும் வரவரக் குறைந்து வருகிறார்கள். அவர்கள் முற்றினும் மறையுமுன் அவர்களுடைய உதவியைக் கொண்டு நவீன தேசீயக் கலாசாலைகளில் வாஸ்து சாஸ்திரத்தைக் கற்பித்தலவசியம் என்று நினைக்கிறோம்.

இரண்டாம் பாகம் ஒன்று வெளியிடப் போவதாக ஆசிரியர் கூறுவதால் இப்புத்தகத்தில் அளவுக்கடங்காத அச்சுப்பிழைகளும் எழுத்துப் பிழைகளும் காணப்படுகின்றன வென்றும் இனிவரும் புத்தகத்தையாவது நல்ல தாளில் பிழையின்றி அச்சிறுத்தல் உபயோகமாகும் என்பதையும் சொல்லத் துணிந்தோம்.

சமாசாரம்.

பிரஹ்மஸ்ரீ திரிவேதி வி. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி அவர்கள் எமக்கு ஒரு திருபம் எழுதியிருக்கிறார். ஆயுர்வேதத்தை இந்தியரனை வரும் பெரிதும் போற்றி, ஆதரித்துப் பெரும் பயனை அடையவேண்டுவது அவசியம் என்று நாம் கூறுவது மிகையாகும். பொருளுதவி செய்யக்கூடிய தாராள சிந்தையுள்ள கனவான்களிடத்திலிருந்து கீழ்க்கூறிய நான்கு விஷயங்களுக்காகப் பொருளுதவியைக் கேட்கிறார். அவையாவன (1) சரகம் முதலிய ஆயுர்வேத கிரந்தங்களை தேச பாஷையில் வியாக்கியானம் செய்து அச்சிடுவது. சரகம் ரூ 4000, ஸுசுருதம் ரூ 5000, வாக்படம் ரூ 3000, ஹரீதம் ரூ 2000, சாரங்கதரம் ரூ 5000, ஆயுர்வேதம் ரூ 500, பத்யாபதயம் ரூ 250, தினசரியை ரூ 250, பஞ்சகர்மா ரூ 150, மேலும் ரூ 150 வில் வெளியிடக்கூடிய கிரந்தங்கள் 30.

(2) சரகம் முதலிய நூல்களில் கூறிய மூலிகைகளைத் தோட்டமாக வைத்து அவைகளின் நாம, ரூப, குணங்களை போதிப்பது இதற்கு ரூ 10,000.

(3) சரகம் முதலிய கிரந்தங்களில் சொல்லிய முறைப்படி மருந்துகள் செய்து சொற்ப விலைக்கு விற்பது இதற்கு ரூ 10,000

(4) மேற்கூறிய ஆயுர்வேத கிரந்தங்களை வித்யார்த்திகளுக்கு அன்னவஸ்திராதிகளை இனமாக அளித்து உபதேசிப்பது. இதற்கு கட்டடம் ரூ 20,000, மாணாக்கன் 1க்கு மாதம் 1க்கு ரூ 15 வீதம் கொடுப்பதற்கு மூலதனம் ரூ 30,000. உபாத்தியாயர்களுக்கு மாதம் 1-க்கு ரூ 150 வீதம் கொடுப்பதற்கு மூலதனம் 30,000 மாணாக்கர் 10க்கு குறையாமல் சேர்ப்பதாக உத்தேசம்.

ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளும், ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளும், வைசிய குல குரு அவர்களும், கொல்லங்கோடு ராஜா அவர்களும் இன்னும் சென்னையில் பல பிரமுகர்களும் இதனை ஆதரிப்பதாகவும் தெரியவருகிறது. முயற்சியோ மிகவும் சிறந்த காரியத்தில். தனிகர்கள் இதனை ஆதரித்து தங்கள் பொருளைப் பொருளுடையதாகச் செய்வார்களாக.